DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 342/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி..லட்சுமி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | அமுதன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

1, முதல் 3 எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம்வட்டம் லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.தில்லைக்கரசி கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கை விரைந்து முடிக்கவேண்டி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 13.09.2023ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் தில்லைக்கரசி பணியில இருந்த போது கரூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று உதவி ஆய்வாளர் தில்லைக்கரசி அவர்கள் சென்று சிகிச்சையில் இருந்த செந்தில்குமார், கவியரசன் ஆகியோர்களை விசாரணை செய்து செந்தில்குமார் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** காலை சுமார் 10.30 மணிக்கு நிலையக்குற்ற எண.320/2023 இதச பிரிவுகள் 294(பி),324, 341, 506(2) ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னிட்டு 13.09.2023 தேதி காலை 04.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் லோகநாதன், கௌதமன் ஆகியோர்களை விசாரித்து பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் செந்தில்குமார், கவியரசன், அன்புச்செல்வன், தங்கவேல், துர்கா, லோகநாதன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை 14.09.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு மேட்டுமகாதானபுரம் பிரிவு ரோடு அருகே நின்றிந்த எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார்.

4. பின்பு காயம்பட்ட செந்தில்குமார், கவியரசன்ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரேம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துப்பதிவேடுகள், மற்றும் காயச்சான்றிதழ்கள் பெற்றார். செந்தில்குமார் (**விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (செந்தில்குமார் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கவியரசன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கவியரசன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** மருத்துவரின அறிக்கையிலிருந்து செந்தில்குமாருக்கு கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் இவ்வழக்கின் இதச பிரிவுகள் 294(பி),324, 341, 506(2) இதிலிருந்து இதச பிரிவுகள் 294(பி),324, 341, 326, 506(2)சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் புலன் விசாரணை முடித்து 12.10.2023 அன்று இதச பிரிவுகள் 294(பி),324, 341, 326, 506(2) ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>1, முதல் 3 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

இறுதி அறிக்கையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணம் அனைத்தும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.17 18:38:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.